2002 ஏப்ரல் 1 ]

வினா எண் 49, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**49—**

**கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம்**

***5900—திரு. கே. ஆறுமுகம்:**

*மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கற்பட்டு கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்குவது குறித்து அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் உள்ளதா?*

*(இ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?*

**மாண்புமிகு திரு.ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) ஆம்.*

*(ஆ) இல்லை.*

*(இ) கேள்விக்கு இடமில்லை.*

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம் தற்போது மிகப் பழமை வாய்ந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தப் பகுதியில் இருக்கிற பிரதம நிலவள வங்கிகள், ஆரம்பக் கூட்டுறவு வங்கிகள், P.A.C.B.-க்கள் எல்லாம் மிக நவீனமான கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஆனால் இவற்றை நிருவகிக்கிற அதிகாரிகளுக்குச் சரியான கட்டடம் இல்லாத ஒரு குறை இருக்கிறது. மேலும் இந்தப் பகுதியினுடைய மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இது இருக்கிறது. எனவே, அந்தக்

கட்டடத்தைக் கட்டி வழங்குவதற்கு நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள 29 மண்டல இணைப் பதிவாளர் அலுவலகங்கள், 63 சரக துணைப் பதிவாளர் அலுவலகங்கள், இரண்டு இணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்), 35 துணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) ஆகியோர் அலுவலகங்கள் எல்லாம் நிதியில்லாத காரணத்தினாலே வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திரு. நா. சந்திரமோகன், திரு. வெ. ஏழுமலை, திரு. மே.ப. காமராஜ், திரு. கே.சி. கருப்பணன் மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**50—**

**கிராமக் கூட்டுறவு வங்கி**

***5920—திரு. நா. சந்திரமோகன்:**

**திரு. வெ. ஏழுமலை:**

**திரு. மே.ப.காமராஜ்:**

**திரு. கே.சி. கருப்பணன்:**

**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமக் கூட்டுறவு வங்கிகளில் வேலை செய்யும் செயலாளர்களை அரசு ஊழியர்களைப் போல் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை பணி மாற்றம் செய்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர அரசுக்குத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS